**ஏப்ரல் – 20**

**"கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான்."**

**- லூக் 16 : 10**

தங்களுடைய தொழிலிலோ அல்லது வீட்டிலோ, ஜீவியத்தின் அன்றாட வழக்கமான காரியக்கிரமத்தோடு கர்த்தருடைய பிள்ளைகள் திருப்தியுள்ளவர்களாய் இருந்து, "தேவன் என்னுடைய உழைப்பை வேறுவிதமாக அதிக விரும்பப்படத்தக்க முறையில் நேரடியாகத் தனக்கு செய்யப்பட்டது போல எண்ணி அதை அங்கீகரிக்கிறார்" என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொள்ளுவதையும் குறிக்கிறதில்லை. இவ்விதமாக வைக்கப்பட்டிருக்கிற ஒவ்வொரு ஆளும், ஒவ்வொரு நாளும் எந்த விதத்தில் தான் நியாயமாகவும், தகுதியாகவும், நிமிஷங்களையும், மணிகளையும், நாட்களையும் உலகப்பிரகாரமான அக்கரைகளிலிருந்து பிரித்து, தன்னுடையவும், மற்றவர்களுடையவும் ஆவிக்குரிய காரியங்களுக்காகவும், ஆவிக்குரிய அக்கறைகளுக்காகவும் பலியாகக் கொடுத்த தன்னுடைய உலகப் பிரகாரமான வேலைகளையும், கடமைகளையும் நுட்பமாய் சோதித்துப் பார்க்க வேண்டும் என்பதைக் குறிக்கிறது. விரைவாகப் பறந்து செல்லும் நேரங்களைக் கூடுமானவரை பிதாவின் வேலையில் செலவிட்டு சீர்படுத்துகிறவனே, பிரதிஷ்டை பண்ணின இருதயம், சுயவெறுப்பு உள்ள சீஷன். **-Z ’03, 407 (R 3265).**

* * * * *

ஒருவனுடைய குணம் அவன் செய்யும் எல்லாவற்றிலேயும் வெளிப்படுத்தப்படுகிறது. ஆகையால், சிறிய காரியங்களையும், சிறிய கடமைகளையும் அவன் நடத்தும் வகை பெரிய காரியங்களிலும், அவனுடைய நடத்தை இருப்பது போல, அவனுடைய குணமும் ஒரே மாதிரியாக இருக்கிறது என்பதற்குச் சான்றாகும். இதுதான் குணத்தை மதிப்பிடுதலின் தெய்வீகச் சட்டம். இதுதான் பரிசுத்தவான்களை அளக்கிறது. அவர்கள் தற்கால ஜீவியத்தின் சிறிய காரியங்களில் கர்த்தருக்கு உண்மையாயிருத்தலை வருங்காலத்தின் பெரிய காரியங்களில் அவர்கள் உண்மையாயிருப்பார்கள் என்பதற்கு ஒரு போதுமான உத்திரவாதமாக அவர் கருதுகிறார். **-P ’33, 63.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சகரி 4:10; மத் 25:21; லூக் 16:11,12; 19:17; எபி 3:2; நீதி 28:20; மத் 10:22;24:45-47; 1கொரி 4:2; வெளி 2:7,10,17,26,27; 3:5,11,12,21.

**கோபுர வாசிப்பு : Z ’15, 234 (R 5740).**

**வினாக்கள் :** நான் இந்த வாரத்தில் உண்மையாயிருந்தேனா? எந்தக் காரியங்களில்? அதன் கிரயம் என்ன? பலன்கள் என்ன?